மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரிவின செயற்றிட்டம்

முன்னோடி பரீட்சை - 2016

வினாத்தாள் - 1


பகுதி - 1

சுட்டெண் : .....

காலம் : 45 நிமி

- எல்லா வினாக்களுக்கும் விடைதருக.
- மிகப் பொருத்தமான விடையை தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. பொருத்தமான உருச் சோடிகள் அடங்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.



A



B



C



D



E



F

1) BD, CF, AF

2) CF, AE, BD

3) AE, BF, DC

02. தரப்பட்டுள்ள மூன்று சொற்களுக்கும் மிகப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.
நிலம், நோயாளிகள், எரிபொருள்

A



1. C

B



2. A

C



3. B

03. கீழ்வரும் உரு வரிசையில் அடுத்து வரவேண்டிய பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.







.....



(1)




(2)





(3)

PRASANNA www.lkedu.lk

04. தரப்பட்டுள்ள உருவில் வெற்றிடத்திற்கு பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.



(1)   (2)  (3)

05. கீழே தரப்பட்டுள்ள வரிசைகளில் உள்ள இரு பக்கமும் சமமான சொல் வரிசையைத் தெரிவுசெய்க.

1. பசவமகரஜன - பகமடஹறங்ஜன
2. தச4பவடசகல - தச4பவடசகல
3. ரகஹறசதனப - ரகஹறசமனக

06. எழுத்துப் பிழையுள்ள வாக்கியத்தைத் தெரிவுசெய்க.

1. ஜேன் பாட்டி எங்களுக்குக் கதைகள் சொல்லித் தருவார்.
2. தங்கைக்கு நெல்லி சாப்பிட விறுப்பம்.
3. கமலா தலை சீவினாள்.

07.கீறிடப்பட்ட சொற்றொடருக்குப் பொருத்தமான தனிச்சொல்லை உள்ளடக்கிய சொற்சோடியைத் தெரிவுசெய்க.

மோகன் அகர வரிசைப்படி சொற்களுக்குப் பொருள் தரும் நூலில் இருந்து தாய் தந்தையை இழந்தவன்என்ற சொல்லுக்குப் பொருள் தேடினான்.

1. அகராதி,அநாதை 2. அகராதி,தபுதாரன் 3. அகராதி,அடிமை

08. முதலில் தரப்பட்டுள்ள பிரசினத்திற்கான விடைக்குப் பதிலீடாக தரப்பட்டுள்ள எண்ணிக்கையைத் தெரிவுசெய்க.

5 + 8 - 2 = 11

1) 3 x 1 2) 4 + 3 3) 22 ÷ 2

09.இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

காலுக்குப் பாதணி எனின் தலைக்கு.....

1. சீப்பு 2. கொண்டையூசி 3. தொப்பி


10. கீழே தரப்பட்டுள்ள உருவில் நிழற்றப்பட்ட பகுதிகளின் எண்ணிக்கைக்குப் பொருத்தமான பின்னத்தைத் தெரிவுசெய்க.



1) $\frac{1}{8}$ 2) $\frac{2}{8}$ 3) $\frac{4}{8}$

PIRASANNA www.lkedu.lk

11."நெருப்பு" என்ற சொல் இரகசியக் குறியீடாக பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.



இதன்படி "கறுப்பு" எனும் சொல் எழுதப்படவேண்டிய சரியான முறை யாது?

(1) 

(2) 

(3) 


12. தரப்பட்டுள்ள பாடலை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.


நிலா நிலா ஓடிவா
நில்லாமல் ஓடிவா
மலைமேல் ஏறிவா
மல்லிகைப் பூ கொண்டுவா!


இக்கவிதையில் எதைக் கொண்டுவருமாறு கேட்கப்பட்டுள்ளது.


1. நிலா 2. மல்லிகைப்பூ 3. மலை

13. கீழே தரப்பட்டுள்ள சதுரமுகியை அமைப்பதற்கு பொருத்தமான வெட்டுருவைத் தெரிவுசெய்க.



(1) 

(2) 

(3) 

14. ஸ்ரீநிவாச வித்தியாலயம் மேல்மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் ஜயவர்தனபுர கல்வி வலயத்தில் மஹரகம கோட்டத்தில் அமைந்துள்ளது. இதனைக் காட்டும் சரியான முறை

 = கோட்டம்  = வலயம்  = மாகாணம்  = பாடசாலை

(1) 

(2) 

(3) 

15. கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுக்கு காரணமாக அமையக்கூடிய விடையைத் தெரிவுசெய்க.

"சத்யா பரீட்சையில் சித்தியடைந்தான்"

1. பாடம் படிக்காததால் 2. பாடம் படித்ததனால் 3. விளையாடியதனால்

16. வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன.


1. சட்டஒழுங்கு இல்லாததால் 2. கவனயீனம் காரணத்தினால் 3. பாதை தெரியாததனால்

PRASANNA www.lkedu.lk

17. நாமல் 2016 பெப்ரவரி மாதம் 24ம் திகதி தனது மாமி வீட்டிற்குச் சென்றான். அவன் மீண்டும் வீட்டிற்கு திரும்பியது 2016 மார்ச் 24ம் திகதியாகும். அவன் மாமி வீட்டில் கழித்த நாட்கள் எத்தனை?

1. 29 நாட்கள் 2. 30 நாட்கள் 3. 31 நாட்கள்

18. கீழ்வரும் உருக்களை சரியான முறையில் ஒழுங்குப்படுத்தினால் கிடைக்கும் விடையைத் தெரிவுசெய்க.



1 2 3 4

(1) 1,2,3,4 (2) 4,1,3,2 (3) 2,3,1,4

19. கீழ்வரும் வாக்கியங்களை ஒழுங்குப்படுத்துவதன் மூலம் ஒரு கதையை உருவாக்கலாம். சரியாக ஒழுங்குப்படுத்தப்பட்ட முறையைத் தெரிவுசெய்க.

1) நரி காகத்தை வர்ணித்தது.
2) காகம் "காகா"எனக் கரைந்தது.
3) வடை கீழே விழுந்தது.
4) காகம் வடையைக் கௌவிக்கொண்டு வந்தது.
5) நரி வடையைச் சாப்பிட்டது.

1. 4, 1, 2, 3, 5 2. 1, 2, 3, 4, 5 3. 4, 1, 3, 2, 5

20. பாடசாலைப் பொறுப்புக்களைப் பகிரந்தளிப்பது தொடர்பான சரியான ஒழுங்குமுறையாக அமைவது.


1. அதிபர், உப அதிபர், வகுப்புத் தலைவர், வகுப்பாசிரியர்
2. அதிபர், உப அதிபர், வகுப்பாசிரியர், வகுப்புத்தலைவர்
3. உபஅதிபர், அதிபர், வகுப்பாசிரியர், வகுப்புத்தலைவர்

21. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடிக்கு எதிரேபிடித்துப் பார்க்கும் போது, அதேவிதத்தில் தென்படுகின்ற எழுத்துக்களைக் கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க.

S, N, R, O, T, P, D, E, Z, B, M, J, F, A, C

1. O, N, T, A 2. O, T, M, A 3. O,Z, B, A

22.சதுரக் கடதாசியைஎத்தனை தடவை மடிப்பதன் மூலம் பின்வரும் உருவைப் பெறமுடியும்.



(1) 2 (2) 3 (3) 4

23. என்னிடம் சில மாபிள்கள் உள்ளன. அவற்றுள் இரண்டைத் தவிர ஏனையவை நீலநிறம். இரண்டைத் தவிர ஏனையவை பச்சைநிறம். இரண்டைத் தவிர ஏனையவை சிவப்புநிறம். என்னிடம் எத்தனை மாபிள்கள் உள்ளன.

1. 3 2. 4 3. 5

PIRASANNA www.vlkedu.lk

24. முதலில் தரப்பட்டுள்ள தகவலை விளங்கிக்கொண்டு அதற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

ரமணி அவளது குடும்பத்தில் இளையவள்.

1. ரமணியின் தாய், தந்தைக்கு வேறு பிள்ளைகள் இல்லை.
2. ரமணிக்கு இரண்டு அண்ணன்மார் மட்டும் உள்ளனர்.
3. ரமணிக்கு ஒரு தங்கை மட்டும் இருக்கின்றாள்.

25. கீழே தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து கோடிடுங்கள்.


சிறுவர்கள் சிலர் நின்றுகொண்டிருக்கும்போது கமலைவிட அமல் உயரமாகவும், அவனைவிட ராஜித உயரமாகவும் தென்பட்டனர். நுவன் கமலைப் பார்க்கிலும் குட்டையானவன்.

1. கமல் உயரமானவன். 2. நுவன் உயரமானவன் 3. குட்டையானவர் நுவன்


26. பண்ணையொன்றில் உள்ள ஆடுகள், வாத்துக்களின் மொத்த எண்ணிக்கை 8. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 26 ஆகும். அங்குள்ள வாத்துக்களின் எண்ணிக்கை யாது?

1. 5 2. 2 3. 3

27. இச்சதுரக் குற்றியில் ⁝ க்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள புள்ளிகளின் எண்ணிக்கை.




(1) 4 (2) 5 (3) 7

28. 

மேலுள்ள உருவின்படி அதிகமாகக் காணப்படுவது.


1. பறவைகள்
2. விலங்குகள்
3. பூச்சிகள்

29. கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்தைப் பூர்த்திசெய்யப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.



(1) 18 (2) 25 (3) 26

30. ஒருபாடசாலையின் 4 வருடங்களுக்கானபுலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளது.




இப்பெறுபேற்று அதிகரிப்பினை அவதானித்து 2016ஆம் ஆண்டு சித்தியடையக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை யாது?

1. 45 2. 40 3. 50

PIRASANNA www.ikedu.lk

31. சோமன் ஒன்றுரூபாய் 36.00 படி மூன்று புத்தகங்களை வாங்கி ரூ.100.00 காசுத் தாளொன்றையும், மூன்று நாணயக் குற்றிகளாகவும் பணத்தை செலுத்தினார். எனின் அம்மூன்று நாணயக் குற்றிகளின் பெறுமதியை வட்டத்தினுள் எழுதுக.




32. இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணிக்கையை எழுதுக.

1	2	A	3
4	B	1	2
3	1	C	4
2	4	3	1

A =..... B=..... C=.....

33. இவ்வுருவில் கூறப்படுவது.




1. மேலே ஏறுங்கள்
2. முன்னால் செல்லுங்கள்
3. இந்தப் பக்கம் மேலே

34. பாடசாலையொன்றில் எப்போதும் காணக்கூடியது.

1. மாணவர்கள் 2. ஆசிரியர்கள் 3. மேசைகதிரைகள்

35. தரப்பட்டுள்ள உருவின்படி அடுக்கப்பட்டுள்ள பெட்டிகளின் எண்ணிக்கை.



(1) 12 (2) 14 (3) 22

36. நான் காலையில் பாடசாலைக்கு செல்லும்போது எனது நிழல் எனக்கு இடப்பக்கத்தில் உள்ளது. எனின் நான் பயணம் செய்வது.

1. தெற்கு 2. வடக்கு 3. மேற்கு

37. இக்கடிகாரமானது 20 நிமிடங்கள் பிந்திக் காட்டுகிறது. எனின் தற்போது சரியான நேரம்



1. 4.35 2. 4.15 3. 4.55


38.கீழே தரப்பட்டுள்ள வரிசையை நன்கு அவதானியுங்கள்.

தTசS3ப768ஒ5சண6ஹகு8Bக186 இவ்வரிசையில் அதிகமாக இடம்பெற்றுள்ளவை.

1. தமிழ் எழுத்துக்கள் 2. இலக்கங்கள் 3. ஆங்கிலஎழுத்துக்கள்

PIRASANNA www.lkedu.lk

39.மாம்பழம் ஒன்றின் விலைக்கு இரண்டு அப்பிள் பழங்களையும், அன்னாசி ஒன்றின் விலைக்கு இரண்டு மாம்பழங்களையும் வாங்கமுடியும். எனின் இங்கு பெறுமதிக்கு ஏற்பவிலை குறைந்தபழம் எது?



1. மாம்பழம்
2. அன்னாசி
3. அப்பிள்

40. தோரணமொன்றில் நீலம், மஞ்சள், சிவப்பு, பச்சை என்ற ஒழுங்கில் நிறக் கொடிகள் தொங்கவிடப்பட்டுள்ளன. இதில் 14ஆவதாக தொங்கவிடப்பட்டுள்ள கொடியின் நிறம்

1. மஞ்சள்
2. நீலம்
3. பச்சை

PIRASANNA
www.lkedu.lk

மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் செயற்றிட்டம்

முன்னோடி பரீட்சை - 2016

வினாத்தாள் - 1

பகுதி - 11

சுட்டெண் : ..... காலம் : 1மணி 15 நிமி

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

- **பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

மழையைப் பெறுவதற்கு மனிதனுக்குக் காடுகள் அவசியமாகின்றன. விலங்குகள் உயிர் வாழ்வதற்கும் காடுகள் தேவைப்படுகின்றன. நாம் வாழும் சூழலில் காடுகள் முக்கிய அங்கமாக கருதப்படுகின்றன. மனிதன் விவசாயத் தேவைகளுக்காகக் காடுகளை அழிக்கின்றான். சனத்தொகை அதிகரிப்புக் காரணமாக வதிவிடத் தேவையும் அதிகரிக்கின்றது. அதனால் காடுகள் மேலும் மேலும் அழிக்கப்பட்டு குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றன. தனக்குத் தேவையான பல்வேறு பொருட்களைத் தயாரிப்பதற்காகவும் மனிதன் காடுகளை அழிக்கின்றான். இதனால் விலங்குகள் தம் இருப்பிடங்களை இழந்துவிடுகின்றன. காடழிப்பு காரணமாகக் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு மனிதர்கள் நீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றனர்.

1. மழையைப் பெறுவதற்கு மனிதருக்கு அவசியமாவது எது?.....
2. இப்பந்தியில் கூறப்பட்டுள்ள அடுக்கு மொழிச் சொல்லை எழுதுக.....
3. உயர்திணைப் பெயர்ச்சொல்லை எழுதுக.....
4. குடியேற்றங்கள் என்பதைப் பிரித்தெழுதுங்கள்.....
5. காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படும் தீமைகள் எவை?.....
6. அதிகரித்து வரும் மனிதனின் இரண்டு தேவைகளை எழுதுக.....
7. கீழ்க்காலையும், விசிறியையும் கொண்டுள்ள சொல்லை எழுதுக.....

- **ஒத்த கருத்தினை எழுதுக.**

8. நீர் - ..... 9. காடுகள் - ..... (9X1=9புள்ளிகள்)

- **ஒழுங்குப்படுத்தி எழுதுக.**

10. சக்தியை/மண்டலம்/ நரம்பு/ இறக்கைகளில்/ கொடுக்கின்றன/அமைந்துள்ள/இறக்கைகளுக்கு

.....

11. தோல்வி/ இறுதியிலே/ பலமுறை/ தம் ஆராய்ச்சியில்/ கண்ட அவர்/ கண்டார்/ வெற்றி

.....

(2X2=4புள்ளிகள்)

12. பின்வரும் சொற்களுக்கான கருத்தினை எழுதுக.

1. அந்தப்புரம் - .....
2. தசாப்தம் - .....

PIRASANNA www.lkedu.lk

13. சரியான எழுத்துக்களைக் கொண்ட சொல்லினைத் தெரிவுசெய்து அதனைச் சுற்றி வட்டமிடுக.

1. திணைக்கழம் 2. திணைக்களம் 3. தினைக்களம்
1. பேருந்து 2. பேருந்து 4. பேறுந்து (4X1=4புள்ளிகள்)

14. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

1. ஐயோ பாவம் இவன் நல்லவனாயிற்றே
2. மெய் வாய் கண் மூக்கு செவி என்பன ஐம்பொறிகளாகும் (2X2=4புள்ளிகள்)

15. பின்வரும் சொற்களுக்கு பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுங்கள்.

1. வைத்தியசாலை - ..... (2X2=4புள்ளிகள்)
2. நான் பாடசாலைக்கு வசுவண்டியில் வந்தேன் - .....

16. கருத்தினைத் தமிழில் எழுதுக.

1. The pen is on the table - .....
2. Bus driver - ..... (2X2=4புள்ளிகள்)

17. பின்வரும் சிங்களச் சொற்களுக்கான கருத்தைத் தமிழில் எழுதுக.

1. கொஸ் கச - .....
2. அபி செல்லம் கரன்ன யமுத? - .....

18. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தின் சிங்கள மொழிக் கருத்தினை தமிழில் எழுதுங்கள்.

1. உமது வீட்டின் விலாசம் என்ன? - .....
2. எனக்குத் தண்ணீர் கொஞ்சம் தாருங்கள் - .....

(4X2=8புள்ளிகள்)

19. சுருக்கக் குறியீட்டின் கருத்தினை எழுதுங்கள்.

1. இ.மி.ச - .....
2. இ.பெ.கூ - ..... (2X1=2புள்ளிகள்)

20. நீர் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது உமது நண்பன் சாந்தனின் ஆடையில் பந்து பட்டதால் அவனது வெள்ளை நிறச் சட்டை சேறாகிவிட்டது. இதனால் சாந்தன் அழத் தொடங்கினான். நீர் இச்சந்தர்ப்பத்தில் எவ்வாறு நடந்துகொள்வீர் என்பதை 5 சொற்களுக்குக் குறையாத 3 வாக்கியங்களில் எழுதுக.

1. .....
.....

2. .....
.....

3. .....
.....

(3X2=6புள்ளிகள்)

PIRASANNA www.Jkedu.lk

• **சரியான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.**

21. பொருந்தாத பிராணியைத் தெரிவுசெய்க.

1. மரநாய் 2. குரங்கு 3. தவளை 4. கீரி

22. காந்தம் ஒன்றுடன் ஒன்று கவரும் முறை.

A) 

B) 

C) 

1. Aயும் Bயும் கவரும் 2. Aயும் Cயும் கவரும

3. Aயும் Cயும் கவரும 4. A கவரும்

23. கொடுக்கப்பட்டுள்ள கால் பாதம் எப்பிராணியினதாகும்.



1. பருந்து
2. வீட்டுக்குருவி
3. சேவல்
4. கொக்கு


24. கவனமின்றி பொலித்தீன்களை சுற்றாடலில் கண்டவாறு வீசுவதால் இடம்பெற முடியாததொன்று.

1. பொலித்தீன் விரைவில் உக்கி நிலத்துடன் சேரும்.
2. பொலித்தீனை எரிப்பதனால் அதில் வெளிவரும் விஷப்புகையினால் நோய் ஏற்படும்.
3. பொலித்தீன்களில் நீர் தேங்குவதால் டெங்குநோய் ஏற்படும்.
4. பொலித்தீன்கள் தேங்குவதனால் நீர் வழிந்தோடும் வழிகள் தடைப்படும்.

25. தேசப்படத்தில் சிவப்பு நிறம் பாவிக்கப்படுவது.

1. மாவட்ட எல்லை 2. நதிகள் 3. மலைத்தொடர் 4. பிரதான வீதி

26. கீழே தரப்பட்டுள்ள உடுக்களில் வேட்டைக்காரன்.

1) 
2) 
3) 
4) 

27. ஊசித்துளைக் கமராவில் பார்க்கும்போது தோன்றும் விம்பம்.


1. தலைக்கீழ் விம்பம் 2. கீழ்ப்பகுதியான விம்பம்

3. நேரான விம்பம் 4. குிடையான விம்பம்

28. பூச்சிகளைப் பிடித்து உண்ணும் தாவரம்.

1. எண்ணெய் 2. கிலிச்சாடி 3. பிகோனியா 4. ஐதரில்லா

29.



PRASANNA www.lkedu.lk


மண் நீரைத் தேக்கி வைத்திருக்கின்ற அளவை அளந்து பார்ப்பதற்காக தயாரிக்கப்பட்ட அளவீட்டு முறையாகும். இப்புனல்கள் மூலம் சம அளவான நீர் ஊற்றப்பட்டுள்ள பயிர்ச்செய்கைக்கு உகந்த மண் வகையாவது.

1. A 2. B 3. C 4. Aயும் Cயும்

30. சீனி தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் தாவரம்.

1. பனை 2. கித்துல் 3. கரும்பு 4. தேங்காய்

31. பின்வரும் உரு எதைக் காட்டும்.



1. சுற்று வட்டம்
2. முன்னால் ஒளிச் சமிக்ஞை
3. பெருந்தெருக்கள் அபிவிருத்தி சபை
4. இலங்கை மின்சார சபை

32. பொது வாகனத்தில் பிரயாணம் செய்யும் போது

1. காசு கொடுக்காமல் பிரயாணம் செய்தல் 2. பிரயாண பற்றுச் சீட்டு பெறல் அவசியம்
3. விரும்பிய இடங்களில் ஏறி இறங்கல். 4. அமைதியாக பயணம் செய்தல்

33. உடல் வளர்ச்சிக்கு அவசியமான உணவு.

1. சோறு 2. குரக்கன் 3. பயறு 4. எள்ளு

34. நுரைச்சோலை அனல்மின் நிலையம் அமைந்துள்ள மாவட்டம்.

1. புத்தளம் 2. அநுராதபுரம் 3. மன்னார் 4. வவுனியா


35. ஒற்றுமை செயற்பாட்டிற்கு முன்மாதிரியாக காணப்படும் பூச்சியினம்.

1. தேன்சிட்டு 2. தேனீ 3. தேன் குழல் 4. தேன் வதை

36. இலங்கை மக்களிடம் அதிகமாக பரவாத நோய்.

1. நீரிழிவு 2. டெங்கு 3. வயிற்றோட்டம் 4. ஜலதோசம்

37. பின்வரும் தாங்கியில் A,B,C,D முறையே துளைகள் 4 இடப்பட்டுள்ளது. தாங்கியில் நீர் முழுமையாக நிரப்பிய பின் எத்துளையில் நீர் வேகமாக வெளியேறும்.



1. A துளையில்
2. B துளையில்
3. C துளையில்
4. D துளையில்

38. இடிமுழக்கம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் நீங்கள் வயல்வெளியில் நிற்பீர்களானால் நீங்கள் எவ்வாறான நிலையில் இருக்கவேண்டும்?

1. அமர்ந்து கொண்டு 2. நின்றுகொண்டு
3. படுத்துக்கொண்டு 4. உயரமான இடத்தில் இருத்தல்

PIRASANNA www.lkedu.lk

39. இலத்திரனியல் தபால் எனக் கருதப்படுவது.

1. ஈ மெயில் 2. பெக்ஸ் 3. ஸ்கைப் 4. எஸ்.எம்.எஸ்

40. "ஆத்துக்கட்டு அலம்பக்கட்டு அவிட்டுக்கட்டு இறுக்கிக்கட்டு
இறுக்கி இறுக்கி இறுக்கிக் கட்டு..." இப்பாடலின் வகையைக் குறிப்பிடுக.

1. தாலாட்டு 2. கிட்டியடித்தல் 3. சாய்ந்தாடம்மா 4. சினிமா

41. மனிதன் ஒருவன் தனக்குள் வளர்த்துக்கொள்ள வேண்டிய பண்பு

1. அதிகாரப் பண்பு 2. அடிமைப்பண்பு 3. உதவும் பண்பு 4. நாசகார பண்பு

42. உரு காட்டும் நடை.



1. சிலந்தி நடை
2. நண்டு நடை
3. அட்டை நடை
4. வாத்து நடை

43. நீர் நாட்டிற்கு செய்ய வேண்டிய கடமை.

1. தனது சொத்துக்களை பாதுகாத்தல் 2. பெரியோரை மதித்தல்
3. ஒழுக்கசீலராக கல்வியை கற்றல் 4. பொதுச் சொத்துக்களை பாதுகாத்தல்

44. விழாக்களின்போது மிக உயரத்தில் காட்சியளிப்பது.

1. தேசியக்கொடி 2. பாடசாலைக்கொடி 3. பௌத்தகொடி 4. விளையாட்டுப்போட்டி

45. கலப்பு ஓட்டத்தின்போது.

1. தடைதாண்டல், ஓடுதல், கோல் மாற்றுதல்
2. தடைதாண்டல், ஓடுதல், நுழைதல், கோல் மாற்றுதல்
3. தடை தாண்டல், நுழைதல், ஓடுதல்
4. தடை தாண்டல், நுழைதல்

(25X1=25புள்ளிகள்)

* **விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுங்கள்.**

46.

1	6
0	3

பின்வரும் கட்டங்களில் உள்ள இலக்கங்கள் மூலம் ஆக்கக்கூடிய மிகப்பெரிய, மிகச்சிறிய எண்களுக்கு இடையிலான வித்தியாசம் எவ்வளவு? .....

47.




இவ்வுருவில் உள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

.....


PIRASANNA www.1kedu.lk

48. ஒரு பக்கற்றில் 30 இனிப்புக்கள் ள்ளன. அவ்வாறான 8 பக்கற்றுக்களில் உள்ள இனிப்புக்களை ஒருவருக்கு 4 வீதம் எத்தனை பேருக்கு கொடுக்கலாம்? .....

49. 

அம்பாந்தோட்டையில் இருந்து கொழும்பு வரை உள்ள தூரம் எவ்வளவு? ..... km

50. 5kg சீனியை கொள்வனவு செய்து ரூபாய் 1000ஐ வியாபாரியிடம் கொடுத்தபின் மிகுதிப்பணம் ரூபாய் 425 கொடுத்தாராயின் 1 kg சீனியின் விலை என்ன? ரூபாய் .....

51. 

படத்தில் 2 m = 1 cm என்ற அளவில் வரையப்பட்ட செவ்வக வடிவமான தகடு ஒன்றின் அளவு காட்டப்படுகின்றது. தகட்டின் உண்மையான சுற்றளவு யாது? ..... m

52. சூரியன் அஸ்தமிக்கும் திசையில் முகத்தைக் காட்டி நிற்கும் பிள்ளையின் இடக்கைக்கு எதிர்ப்பக்கம் காட்டும் திசை எது? .....


53. "பதின்மூன்று" ரோமன் இலக்கத்தில் எழுதுக. .....


54. குமார் பி.ப 8.30 மணிக்கு நித்திரைக்கு சென்று, மறுநாள் மு.ப 4.00 மணிக்கு எழுந்தார். அவர் நித்திரை செய்த காலம் எவ்வளவு? ..... மணித்தியாலங்கள்


55. A பாத்திரத்தை நிரப்புவதற்கு B பாத்திரத்திலிருந்து 8 முறை நீரை ஊற்றினால், வெளியேறும் நீரின் அளவு எவ்வளவு? ..... ml



56. இடைவெளிக்குப் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.









57. 
மேலேயுள்ள உருவில் ¾ பங்கை நிறந்தீட்ட மேலும் எத்தனை கட்டங்கள் நிறந் தீட்ட வேண்டும்? .....

PIRASANNA www.lkedu.lk

58. 

உருவிலுள்ள எல்லா கட்டங்களின் நீளம் 1 cm அகலம் 1cm ஆகும். உருவில் நிழற்றிய பகுதியின் பரப்பளவு யாது? ..... cm^2

59. 

இங்கு தரப்பட்டுள்ள பகுதிகளை உபயோகித்து உருவாக்கக்கூடிய முப்பரிமாண வடிவம் என்ன? .....

60. போத்தலிலுள்ள மருந்தின் அளவு 10 மேசைக்கரண்டி. ஒரு மேசைக்கரண்டி 10ml கொள்ளும். பிள்ளைக்கு ஒரு நாளைக்கு 3 முறை இந்த மருந்தை 1 மேசைக்கரண்டி வீதம் கொடுக்கவேண்டும் என்று வைத்தியர் கூறினார். போத்தலில் உள்ள மருந்து எத்தனை நாட்களுக்கு போதுமாக இருக்கும்? .....

(15X2=30புள்ளிகள்)

PIRASANNA www.lkedu.lk